ஸ்ரீ ராம் ஜய ராம் ஜய ஜய ராம்

ராம நாம தாரகம்

ஆசிரியர் :

R. ஜவந்திநாதன்

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர கிருத மஸ்த காஞ்சலீம்
பாஷ்பவாரி பரி பூர்ண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்

SRI ஸமர்ப்பணம்

ஸ்ரீ குருப்யோ நம :

ச்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம்

கருணாலயம்!

நமாமி பகவத் பாதம் சங்கரம் லோக சங்கரம்!!

குருர் பிரம்மா குருர் விஷ்ணு குருர்தேவோ

மஹேச்வர :

குருஸ் ஸாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே

நம :!!

குருப்யோ! நம!

ஜயது ஜயது மந்த்ரம் ஜன்ம சாபல்ய மந்த்ரம்
ஜனன மரண விச்சேதபேத கிலேச மந்த்ரம்
சகல நிகம மந்த்ரம் சர்வ சாஸ்த்ரைக மந்த்ரம்
ரகுபதி நிஜ மந்த்ரம் ராமம் ராமேதி மந்த்ரம்

(1)

மகா பெரியவாள் : தாரக நாமங்கள் இரண்டு தான். ஒன்று பிரணவமாகிய "ஓம்". மற்றது "ராம்" என்பது. எல்லா மந்திரங்களுக்கும் "ஓம்" என்ற பதத்தை சேர்த்தால் தான் பலன் உண்டாகும். ஆனால் "ராம்" என்ற மந்திரத்திற்கு "ஓம்" சேர்க்க வேண்டியதில்லை. ஏனென்றால் அதுவே தாரக நாமம்.

(2)

பரமேஸ்வருடைய "பஞ்சாக்ஷரமாகிய" "நம சிவாய" என்ற மந்திரத்தின் ஜீவாக்ஷரம் "ம" ஆகும். அது போல் "நாராயணாய" என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தின் ஜீவாக்ஷரம் "ரா". இவை இரண்டும் சேர்ந்துதான் "ராம" என்ற நாமம். சிவ விஷ்னு பேதமில்லாமல் இரண்டும் சேர்ந்த அற்புத சக்தி வாய்ந்த நாமம் ராம நாமம். ஆகையால் இது இணையற்றது. சிவ மந்த்ர முலனு 'மா' ஜீவமு மாதவ மந்த்ர முலனு "ரா" ஜீவமு - தியாக ராஜர்.

(3)

சமீபத்தில் ரஷ்யாவில் ஹிந்து மதத்தில் சொல்லப்படும் சகல பகவான் நாமங்களையும் கம்ப்யூட்டரில் போட்டு அவைகளின் ஒலியின் சக்தியை பரீட்சை பண்ணினார்கள்.எல்லா நாமங்களை விட. 'ராம" என்ற இரண்டு அக்ஷர சேர்க்கை அபரிமிதமான ஆற்றலைக் காட்டியது. இரண்டு அக்ஷரமும் மிக பலம் வாய்ந்தது என்று கண்டு பிடித்தனர்.

(4)

எல்லா நாமங்களும் பாபத்தை அறவே போக்கும், ஆனால் ராம நாமம பிற்காலத்தில் பாவம் சேராமலும் தடுக்கும் சக்தியும் வாய்ந்தது. (Curative and Preventive)

"ரா" சப்தாச்சோர மாத்ரேன முகாந் நிர்யாந்தி பாதகா. புநப்ரவேச மித்யாச மகாரஸ்தத் கவாடவத்"

நாமம் ஜபிப்பவன் பாபத்தில் ஈடுபடமாட்டான். ராவணனுக்கு, ராமா ம் போட்டுக் கொண்டு கண்ணாடியில் தன்னை பார்த்தவுடனே. யை பற்றிய காம எண்ணம் மறைந்தது. "ராம நாமம் காம நாசனம்".

(5)

மகாப்பெரியவாள் 13வது வயதில் (1907) திடீரென்று கலவையில் காமகோடி பீடத்தின் அதிபராக ஏற்றி வைக்கப்பட்டார். தீக்ஷையில்லை சந்யாசமில்லை. அனுஷ்டானமுமில்லை. திண்டிவனத்தில் 9வது வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். தனக்கு ஒன்றும் புரியாத நிலையில் 'ஜகத்குரு' என்ற பதவியை வகிக்கப் பயந்தார். அவர் தாயார் "ஸ்வாமிநாதா, உனக்கு எப்போது கஷ்டம் வருகிறதோ, அப்போது 'ராம' நாமம் ஜபம் பண்ணினால் கஷ்டம் விலகிவிடும்" என்று சொல்லியிருந்தார். நான் அந்த உபதேசப்படியே ராம நாம ஜபம் பண்ணினேன். அது தான் இவ்வளவுகாலம் என்னை பீடாதிபதியாக நிலைக்கச் செய்தது" என்றார். 'ராம நாமம்' அவர் நீண்ட கால பட்டத்திற்கு அஸ்தி வாரம்.

(6)

ஆஞ்சநேயர் ராம நாமத்தின் உருவம். ராம நாமம் உயர்ந்த மோக்ஷ சாதனமளிக்க வல்லது. அதை சிறு சிறு அற்ப லாபங்களுக்கு உபயோகிக்க அனுமதிக்கமாட்டார். ஒரு சமயம் சனகாதியோகியர் "ராம நாமம்' உபதேசம் செய்யுமாறு ஆஞ்சநேயரைக் கேட்டுக் கொண்டார்கள். ஆஞ்சநேயர் மறுத்தார். "அற்ப பலன்களுக்கு அது உபயோகிக்கப்படும். நான் சம்மதிக்க மாட்டேன்' என்றார். "என்னிடம் வந்தாலே சகல கஷ்டங்களும் நீங்கும். பேரானந்தத்திற்கு மட்டும் ராம நாமம் ஜபித்து ராமனை அடையலாம் அதுதான் என் விருப்பம்" என்றார்.

"ராம த்வாரே தும் ரக்வாரே, ஹோதன ஆக்ஞாபின பைஸாரே "ஹனுமான் சாலிஸா" - துளசிதாஸர்.

(7)

கபீர் தாஸர், முஸ்லீம் குடும்பத்தால் வளர்க்கப்பட்டார். சுகப்ரம்மம் அவதாரம், ஸ்வாமி ராமானந்த தீர்த்தாரிடம் "ராம நாமம் உபதேசம் செய்யுமாறு வேண்டினார். ஸ்வாமி மறுத்தார். ஒரு நாள் விடியற்காலை இருட்டில் ராமனந்தார். கங்கையில் ஸ்னானம் செய்யப்படியில் இறங்கும்போது கபீர் வழியில் குறுக்கே படுத்து விட, குரு நாதர் பாதம் இடறிற்று. அவர் 'ராம்' என்று சொல்ல பாததீக்ஷை பெற்று ராமநாம உபதேசமும் பெற்று விட்டார் பெரிய ராம பக்தர் ஆனார் 'அவர் கூறியதாவது'.

"கஹத கபீரா ஜோமுக ராம நஹி ஹோமுக துலபரி"

(எவன் வாயில் ராம நாமம் இல்லையோ அவன் வாயில் மண்ணைப்போடு)

(8)

மருதா நல்லூர் ஸ்வாமிகள் 150 வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர். பஜனை சம்பிரதாயத்தை ஏற்படுத்தியவர். பிறவியில் ஊமை. 5 வயதில் ஒரு மகான் அருளால் பேச்சு வந்து பேசிய முதல் வார்த்தை 'ராம்' என்ற நாமம் தான். அத்யயனம் பயின்றார். 18வது வயதில் வீடுகளில் கர்மாக்கள் செய்து வைக்கும் யோக்யதை அடைந்தார். ஒரு நாள் அவர் தகப்பனார் செய்து வைக்க வேண்டிய 'சிரார்த்தத்தை' அவரைக் கொண்டுச் செய்யச் சொன்னார். இவர் கர்த்தா இருக்கும் கிராமத்திற்கு நடந்து செல்கையில் வழியில் ஒரு ஆஞ்சநேயர் கோவில் இருந்ததால் அதன் உள்ளே சென்று ஆஞ்சநேயரை வழிபட்டு ராமத்தியானத்தில் உட்கார்ந்து விட்டார். சாயங்காலம் ஆயிற்று. கண் விழித்துப் பார்த்ததில் ஆஞ்சநேயர் முன்னால் புது வஸ்திரமும் தக்ஷிணையும் இருந்தன. ஆஞ்சநேயரே இவர் வடிவில் சென்று சிரார்த்தம் செய்து வைத்துவிட்டு வந்தார். இவர் வஸ்திரம் தக்ஷிணையெல்லாம் எடுத்துக் கொண்டு தகப்பனாரிடம் கொடுத்து நடந்ததைச்சொன்னார். தகப்பனார் கட்டித் தழுவினார். இதற்குள் அந்த கர்த்தாவும் வந்து, சிரார்த்தம் சிறப்பாக நடந்ததாகவும். இந்த வஸ்திரம் தான் கொடுத்ததுதான் என்றும் ஒப்புக்கொண்டார்.

''அனன்யாஸ் சிந்தயந்தோ மாம்யே ஜனா பர்யுபாஸதே தேஷாம் நித்யாபி யுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யகம்"

"பகவத் கீதை"

(9)

துளசிதாஸர். ஹிந்தியில் 'ராம சரித்ர மானஸா" என்ற ராமாயணத்தை எழுதி காசி விஸ்வேஸ்வரின் அனுக்ரகத்தைப் பெற்றவர். பரமேஸ்வரனே அவருக்கு உத்திரவிட்டு ராமாயணத்தை ஹிந்தியில் எழுதியதை ஆஞ்சநேயர் மூலமாக பிரகாசிக்கச் செய்தார். துளசி பிறக்கும்போது பற்கள் எல்லாம் முளைத்திருந்தன. பிறந்தபோதே 'ராம்' என்றார். அனுமான் சாலிஸா என்ற ஸ்லோகத்தில் 'நீயே ராம பக்தியின் சாரம்'. (ராம் ரஸாயனதும் ஹரே பாஸா) என்கிறார். அனுமானை நினைத்தால் ராமர் அருள் சுலபமாக கிட்டும். அவருடைய ராமாயண சுவடிகளைத் திருட வந்த திருடர்கள் மனம் மாறி 'ராம நாம' பஜனை செய்து விட்டு போனார்கள். பார்வதி தேவியே அவருக்கு சிறு வயதில் அன்னமிட்டு வளர்த்தார். உபநயனத்தின் போது தானே 'காயத்ரி மந்திரம் சொன்னார். ராமர் தரிசனம் தந்து அவர் அரைத்த சந்தனத்தை இட்டுக் கொண்டார். ராம நாமம் அவர் உயிர் நாடி.

(10)

போதேந்திராள், காஞ்சி காமகோடி பீடத்தின் 59வது ஜகத்குரு. ஒரிசாவில் பிரயாணம் செய்யும் போது அங்கே லக்ஷிமிஸ்ரீதரர்' என்பவர் இல்லத்தில்

தங்கினார் ராம நாம மஹிமையை உணர்ந்து உடனே பீடத்தை விட்டு விலகி 'ராம நாம' பிரசாரத்தில் இறங்கி கோவிந்தபுரத்தில் ஜீவ சமாதியில் இன்றும் ராம நாம தீக்ஷை அனைவருக்கும் அளித்து வருகிறார்.

(11)

ஸ்ரீ ராகவேந்திரர் மடத்தின் தலைவராகப் பொறுப்பேற்று அங்குள்ள மூலராமரை தியானித்து அனைவருக்கும் அருட் பிரசாதம் வழங்கினார் இன்றும் மந்திராலயத்தில் ஜீவசமாதியிலிருந்து கொண்டு பக்தர்களுக்கு பிரத்யக்ஷ தெய்வமாக விளங்குகிறார் 'ராம நாமம்' தான் அங்கு ஆணிவேர்.

(12)

ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் காசிக்குச் சென்று ஒரு சிவயோகியிடம் தீக்ஷை பெற்றபோது கங்கையிலிருந்து மேலே ஒரு வீணை தோன்றியது. அதைக் கையில் எடுத்து வணங்கி கங்கா மாதாவின் ஆசிர்வாதமாக பெற்றுக்கொண்டார். அந்த வீணையில் 'ராம நாமம்' பொறித்திருந்தது இன்றும் அந்த வீணை அவர் சந்ததியினரிடம் உள்ளது.

(13)

ஸ்ரீ தியாகராஜர் ராம நாமத்தை 96 கோடி உச்சரித்தவர் (ராம சடாக்ஷரி) ராமர் அவர் இல்லத்திற்கு வந்து தரிசனம் கொடுத்தார் 'ராம நாமம்' யமனையே நடுங்க வைக்கும் என்று தனது முகாரி கீர்த்தனத்தில் கூறுகிறார்

"சிந்திஸ் துன்னாடே - யமுடு
சந்ததமு ஸு ஜனனுலெல்ல
ஸத் பஜன ஜேயுட ஜீஸி"

(ஜனங்கள் ராம நாமம் சொல்வதைக் கேட்ட யமன் இனி தனக்கு வேலையிருக்காது என்று கவலைப்படுகிறான்)

(14)

சேலத்தில் 40 வருஷங்களுக்கு முன் சுந்தரம் செட்டியார் என்பவர் இருந்தார். அவர் ஐகோர்ட்டு ஜட்ஜ். பரம ஆஸ்திகர். ராமாயண மதுர பாஷிணியான ஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதர் 30 நாள் சேலத்தில் ராமாயண உபன்யாசம் நடத்தினார். செட்டியார் அப்போது சிரம தசையில் இருந்தார். அவர் கைகளில், கெட்ட ரேகைகள், புள்ளிகள் இருந்தன. முப்பது நாளும் பயபக்தியுடனும் சிரத்தையுடனும் ராமாயணத்தைக் கேட்டார். தினமும் ராம நாம ஜபம் பண்ணினார். கையில் இருந்த கெட்ட சின்னங்கள் மறைந்து விட்டன. ஆச்சரியப்பட்டு, தீக்ஷிதர் அவர்களை வணங்கி விஷயத்தைக் கூறினார்.

"கிரக பலமேமி ராமா, நீ அனுக்ரக பலமே பலமு" தியாகராஜர்.

15

ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒருதரம் ராம பஜனையில் கலந்து கொண்டார். ராமநாமம் அவரை புல்லரிக்கச் செய்தது. உடனே சிஷ்யர்களை ஒரு வால் கொண்டு வரச் சொன்னார். அந்த வாலை பின்னால் செருகிக்கொண்டு ஆஞ்சநேயராக மாறி கண்ணீர் மல்க நர்த்தன மாடினார். பிறகு சமாதியில் வெகுநேரம் இருந்தார். ராம நாமம் தாரக மந்திரம். அனைவரையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் (தாரகம் என்றால் மேலே உயர்த்துவது)

16

புரந்தரதாஸர் கிருஷ்ண பக்தர். லக்ஷக்கணக்கான பதங்கள் அவர் பக்தியில் உதித்தன. ஆனால் அவர் 'ராம' நாமத்தின் உயர்வைச் சொல்கையில் வேறு எந்த மந்திரமும் செய்யாததை ராம நாமம் செய்யும் என்கிறார்.

"ராம மந்திரவ ஜபிஸோ மனுஜா,
ஆமந்த்ர ஈ மந்த்ர நீ மெச்சி கெடபேடா
சோம சேகர தன்ன பாமினி கேளித மந்த்ர"

17

காசியில் பரமேஸ்வரன் பார்வதியின் காதில் சதா ராம நாமத்தை உபதேசிக்கிறார் என்பது சாஸ்திர பூர்வமான உண்மை'

"ஸ்ரீ ராம ராமேதி ரமே ராமே மனோரமே
ஸஹஸ்ர நாம தத்துல்யம்
ராம நாம வரானனே"

(விஷ்ணு ஸஹஸ்ர நாமம்)

18

தியாகராஜர் :

இந்த சௌக்யமுனினே
ஜபஜால எவரிகி தெலுஸீனு
சங்கரனுகி தெலுஸீனு"

(ராமநாம சுகம் எவருக்கு தெரியும்? சொல்ல இயலாது. சங்கரனுக்கே தெரியும்).

19

ராம லக்ஷ்மணர்கள் ஒரு சமயம் பம்பா நதிக் கரையில் உலாவிக் கொண்டு இருந்தனர். அங்கே ஒரு காகம் நதியின் நீரைப் பருகச் சென்றது. ஆனால்

பருகாமல் திரும்பியது. இப்படியே பலமுறை செய்தது. லக்ஷ்மணனுக்கு இதன் அர்த்தம் புரியவில்லை. ராமரைக் கேட்க அவர் "இந்தக் காகம் பரம பாகவதன். ராம நாமத்தை இடைவிடாது சொல்கிறான். இவன் பக்திக்கு ஈடு இல்லை. நீரைப் பருகும் போது ராம நாமம் விட்டுப்போகுமே என்று பயப்படுகிறான். தாகத்தால் உயிர் போனாலும் பரவாயில்லை. ஆனால் ராம நாமம் உயிரை விட மேலானது என்பது அவன் கொள்கை' என்றார்.

(20)

ஒருவர் ராம நாமம் எப்போது சொல்லலாம் என்று கேட்டார். அதற்கு எப்பொழுது சொல்லக்கூடாது? என்று ஒரு மகான் பதில் அளித்தார்.

ஒரு பக்தன் இடைவிடாது ராம நாமம் சொல்லிவந்தான். மலஜலம் கழிக்கும் போதும் சொன்னான். அப்போது அங்கு வந்த ஆஞ்சநேயர் அவனைப் பளார் என்று அறைந்தார். புனிதமான நாமத்தை இப்போது சொல்வதா என்று கோபம். ஆனால் ஆஞ்சநேயர் வழக்கம் போல் ராமரைச் சந்திக்கும் போது ராமர் தன் முதுகில் விழுந்த அறையைக் காட்டினார். ஆஞ்சநேயர் நடுங்கினார். "என் நாமம் சொல்லும் பக்தன் அடையும் சுக துக்கங்கள் எனக்கும் உண்டு" என்றார் ராமர்."சத்ய சாய் பாபா"

(21)

சமர்த்த ராமதாஸர் ஆஞ்சநேயர் அம்சம். சிறிய வால் அவருக்கு முளைத்திருந்ததது அவர் சிவாஜியின் குரு. சிவாஜி அவரிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து அடிமையாக நின்றான். குரு நாதரிடம் உத்தரவு கேட்கையில் "இந்த மராட்டிய ராஜ்யத்தில் யார் - யாருடன் பேசினாலும் முதலில் "ராம்" என்று சொல்லிவிட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று பிரஜைகளுக்கு ஆணையிடுங்கள்" என்றார். அவ்வாறே இன்றும் அங்கே அந்த பழக்கம் இருக்கின்றது.

(22)

மகாப் பெரியவாள் 1946-ல் எல்லா முத்ராதிகாரிகளுக்கும் உத்தரவு போட்டார் "எந்த வீட்டில் யாரேனும் மரணாவஸ்தையில் இருந்தால் உடனே சென்று 1008 தடவை ராம நாமம் ஜபிக்க வேண்டும். இது ஜீவாத்ம கைங்கர்யம். அழைப்புக்கு காத்திருக்கக்கூடாது" என்றார். அவர் பரமேஸ்வரர் அம்சம் அல்லவா? ராமநாம தாரகம் ஆத்மாவைக் கரையேற்றும் என்பதில் ஐயமுண்டோ?

23

சதாசிவ ப்ரம்மேந்திராள் அவதூதர் அத்வைதி ஆனால் பகவானை சகுணத்தில் உபாசிப்பதுதான் சுலபம் என்று உபதேசித்தார்.

"பிபரே ராம ரஸம் ரஸனே" ராம நாம ரஸத்தை எப்போதும் பருகு. சகல துன்பங்களிலிருந்து விடுபடுவாய்" என்கிறார்.

24

ராம ஆஞ்சநேய யுத்தம்: ஒரு சமயம் சகுந்தன் என்ற அரசன் சபையில் எல்லா முனிவர்களும் வந்து அமர்ந்தார்கள். அவன் வசிஷ்டருக்கு முக்யத்வம் கொடுத்தான். விஸ்வாமித்ரர் கோபமடைந்து சூரிய அஸ்தமனத்திற்குள் அவன் தலை தன் காலில் உருள வேண்டும் என்று தன் சீடன் ராமரிடம் கூற, அவரும் ஒப்புக்கொண்டார். நாரதர் மூலம் இதை அறிந்த சகுந்தன் 'ஆஞ்சநேயரிடம் சரண் புகுந்தான். விபரம் தெரியாமல் ஒத்துக் கொண்ட ஆஞ்சநேயர் வாக்கு மீற முடியாமல் ராமரோடு யுத்தம் செய்யச் சென்றார். ஆனால் ராமநாமத்தை ஆயுதமாகக் கொண்டு தியானத்தில் அமர்ந்தார். ராமருடைய பாணங்கள் அனுமாருடைய ரோமங்களைத் துளைத்துச் செல்ல முடியவில்லை. அவர் ரோமங்கள் ராம நாம கோசம். பிறகு ராமர் அனுமானைப் பாராட்ட. அனுமான், "எல்லாம் தங்கள் நாம மஹிமைதான்" என்று வினயத்தோடு சொன்னார். ராமரைவிட ராம நாமம் பலம் வாய்ந்தது அல்லவா ?

"நீ நாம ரூபம் உலகு நித்ய ஜய மங்களம்"
என்று நாமத்தை முதலில் சொல்கிறார் தியாகராஜர்.

25

சிவ ஆஞ்சநேய யுத்தம்

வீரமணி என்ற அரசன் சிறந்த சிவ பக்தர். சிவன் அவனுக்கு அடிக்கடி காட்சி தருவதுண்டு. மிகுந்த பலசாலி. ராமர், அஸ்வமேத யாகம் செய்யும் தருணம் யாகத்தில் விடப்பட்ட குதிரை எல்லா தேசங்களிலும் பவனி வந்தது. அனைத்து அரசர்களும் அதை வணங்கினார்கள். ஆனால் வீரமணி பணிய மறுத்தான். குதிரையுடன் வந்த பரதன், சத்ருக்னன், ஆஞ்சநேயர் அனைவரையும் எதிர்த்தான். மற்றவர் மூர்ச்சையாய் விழ ஆஞ்சநேயர் வீரமணியை எதிர்த்துப் போராடி அவனை விரட்டினார். அவன் பரமசிவனிடம் சென்று முறையிட்டு அனுமனை எதிர்க்க வேண்டினார். பரமேஸ்வரன் அவன் பக்திக்குக் கட்டுப்பட்டு அனுமனுடன் யுத்தம் செய்யச் சென்றார். அனுமன் ராம நாமத்தையே தன் துணையாகக் கொண்டதால் ஈஸ்வரனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. முடிவில் "உனக்கு என்ன வரம் வேண்டும்!' என்று

கேட்க அனுமன் "கீழே மூர்ச்சையாய்க்கிடக்கும் உடல்களைப் பாதுகாத்துக் கொண்டிருங்கள் நான் சஞ்சீவி கொண்டு வருகிறேன்" என்றான். சிவன் சிரித்து உன்னிடம் உள்ள ராம நாமத்தால் என்னையே வென்றாய் அதைவிட சஞ்சீவி உயர்ந்ததோ? ராம நாமத்தினாலேயே இவர்களை எழுப்பலாமே" என்றார். அனுமன் வெட்கித் தலை குனிந்தான்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
திண்மையும் பாபமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே 'ராமா' என்ற இரண்டெழுத்தினால்"

-கம்பர்

வெங்கடேசா வாஸுதேவா
வாரி ஜாஸன வந்தித:
ஸ்வாமி புஷ்கரிணி வாஸா
சங்க சக்ர கதாதரா
பீதாம்பரதரோ தேவா
கருடாரூட சோபித
விஸ்வாத்மா விஸ்வ லோகேஸா
விஜயோ வெங்கடேஸ்வர:

ஆஞ்சநேய அஞ்சலி

(எந்த நேர்ச்சினா மெட்டு)

சுத்த தன்யாசி — தேசாதி

பல்லவி

ஆஞ்சநேயனே அருள் வடிவனே
அஞ்சனை சுதனே சரணடைந்தேனே (ஆ)

அ. பல்லவி

ராம தாஸனே சீதா ஸோக நாசனே
பரத லக்ஷ்மண ப்ராணதாதனே (ஆ)

சரணம்

ராம தூதனே ராம ப்ராண ப்ரியனே
வஜ்ர காயனே சஞ்சீவி ராயனே
ராம பாத சேவா துரந்த ரனே
கலி ஹரனே பக்த ரக்ஷகனே (ஆ)

R. ஜவந்திநாதன்

"ஆஞ்சநேய" தாஸன்

Gurubyo Namaha

Children Books, General Books,
Religious Books, Audio Cassetties,
Agarbathis & Pooja Materials available

BHAVANI BOOK CENTRE

19, STATION ROAD, WEST MAMBALAM,
CHENNAI - 600 033, PHONE : 4748124

BHAVAN'S PUSTAK BHARATHI

Sanna[illegible]dhi Street. Mylapore. Chennai - 600 004.
Phone : 4940811, 4943450
(Near Kapaleeswarar Temple)

DEALING WITH
Religious Books • Bhavan's Publication
• General Books • Children Books
• Audio Cassettes • Agarbathis and Pooja Materials